[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 15

1978-79 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் போது பெரியார்-அண்ணு நினைவகம் பற்றி 28—2—1978 அன்று திரு. என். வீராசாமி சில கருத்துக்களை வெளியிட்டார். அது தொடர்பாக நிலைமையை விளக்கி கீழ்க்காணும் தகவல்களை அளிக்க முன்வருகிறேன்.

1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி அன்று பெரியார்-அண்ணு நினைவகத்திற்குப் பார்வையிடச் சென்றிருந்த கோபிசெட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு. கோ. தமிழரசு என்பவர் 'பார்வையாளர் புத்தகத்தில்' சில கருத்துக்களை எழுதியிருந்தார். நினைவகத்தைக் கவனித்துக்கொள்ள அங்குப் பொறுப்பானவர்கள் எவரும் இல்லை என்றும், இரண்டு சிறுவர்கள் அன்ருட சம்பள தற்காலிக அடிப்படையில் (என். எம். ஆர்) 2—1—1978 ஆம் நாளிலிருந்துதான் அங்குப் பணியாற்றிவருவதாகவும் அவர்களில் ஒரு பையனுகிய திரு. விஜயன் என்பவன் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவன் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஈரோடு பிரிவின் உதவிப் பொறியாளர், ஈரோடு கிழக்கு துணைக் கோட்டத்தின் உதவி நிருவாகப் பொறியாளர் ஆகியோரின் கண்காணிப்பில் பெரியார்-அண்ணு நினைவகம் இருந்து வருவதாகவும், பார்வையாளர் குறிப்பிட்டிருப்பது போல விஜயன் என்ற பெயரில் எவரும் அங்கு நியமிக்கப்படவில்லை என்றும் பொதுப்பணித் துறை (கட்டிடங்கள்) முதுநிலை துணைத் தலைமைப் பொறியாளரும், தலைமைப் பொறியாளரும் இதுபற்றி விசாரித்து அறிவித்துள்ளனர். பார்வையாளர் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த கருத்துக்களை உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வராததற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்தும் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது என்றும் விளக்கங்களைப் பெற்றதன் பேரில் அலுவலர்களின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வீராசாமி தெரிவித்த கருத்துக்களில் உண்மை ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) 1974-75 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கை குறித்து.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சார்ந்த 82-வது விதியின்கீழ் பின்வரும் அறிக்கையை அளிக்க விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட 1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கையின் படிகளைக் குறித்து திரு. என். வீராசாமி சில கருத்துக்களை 28—2—1978 ஆம் நாளன்று தெரிவித்தார்.

1974-75 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாட்டு நிர்வாக அறிக்கை வெளியிடப் பட்டது. 1976 டிசம்பரில் எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் அதன் படிகள் அரசின் அஞ்சல் பட்டியலின்படி துறைத் தலைவர்களுக்கும், நிறுவனங் களுக்கும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டன. அப் போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டிருந்ததால், சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு அந்த அறிக்கைகள் வழங்கப்படவில்லை. அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் பொது மக்களுக்கு இந்த அறிக் கையின் 18 பிரதிகளை விற்பனை செய்துள்ளது. தற்போது 288 பிரதிகள் அங்கு விற்பனைக்கு உள்ளன. இதனால் இவ்வறிக்கையின் பிரதிகள் எரிக்கப்பட்டன என்பது உண்மையல்ல.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வீராசாமி தெரிவித்த கருத்துக் களில் உண்மை ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இந்த அறிக்கையின் மீது எந்த விதமான வினாவும் எழுப்பப்படலாகாது என்று விதியில் தெளிவாக இருக்கிறது. அதைத் தெரிந்த நீங்களே கேட்டால், என்ன செய்வது ? அமருங்கள்.

5. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கையை அளித்தல்.

திரு. எம். சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கையை தங்களுடைய அனுமதி யோடு இங்கே அளிக்கிறேன். உறுதி மொழிகளைப் பரிசீலனை செய்து அவற் றின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டு சில உறுதிமொழிகளின் பேரில் சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி, பல உறுதி மொழிகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதைப்பற்றி ஆராய் வதற்காக அண்டை மாநிலங்களுக்குச் சென்று இந்தக் குழு தன்னுடைய வேலையை சிறப்புறச் செய்து இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.